**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நன்னிலம்**

2025–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02–ம் நாள் வியாழக்கிழமை

**<u>O.S. No. 41/2022</u>**

வாதி தரப்பு சாட்சியாகிய P.W.1 –ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44–வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. S. பாரதிதாசன், M. L., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நன்னிலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முகம்மது சுல்தான் | தாலுக்கா | : | நாகப்பட்டினம் |
| த/க/பெ. | : | சையது அலி | கிராமம் | : | ஏனங்குடி |
| | | | தொழில் | : | விவசாயம் |
| | | | வயது | : | 49 |

நாள்: **<u>02.01.2025</u>**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லித்தான் தயார் செய்யப்பட்டது. அதை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். தாவாப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

| **வ.எண்** | **ஆவண தேதி** | **ஆவணங்களின் விபரம்** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|
| 1. | 13.09.1986 | வாதியின் தாயார் பெயரில் உள்ள கிரய ஆவணம் | அசல் |
| 2. | 15.08.1979 | அபீப் அம்மாள் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம் | கணினி பதிவிறக்க நகல் |
| 3. | 02.01.1997 | சிராஜுனிஷா இறப்பு சான்று | அசல் |
| 4. | 03.03.1997 | சிராஜுனிஷாவின் வாரிசு சான்று | அசல் |
| 5. | 13.04.2010 | வாதிகளின் தந்தை செய்யது அலி என்பவரது இறப்பு சான்று | அசல் |
| 6. | 08.04.2010 | வாதிகளின் தந்தை செய்யது அலி என்பவரின் வாரிசு சான்று | அசல் |
| 7. | 05.05.2022 | பேரளம் சார்பதிவாளர் வழங்கிய உத்தரவு | அசல் |
| 8. | 11.05.2022 | நன்னிலம் வட்டாட்சியர் வழங்கிய மேலெழுத்து உத்தரவு | அசல் |

**2, 3–ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் புல எண்.106/1 என்றால் சரிதான். அந்த புல எண்ணில் எத்தனை சென்டுகள் உள்ளது என்றால் பதினாறு சென்டுகள் உள்ளது. அந்த சொத்தை யார் வாங்கினார்கள் என்றால் எனது தாயார் வாங்கினார். எனது தயார் எப்பொழுது காலமானார் என்றால் 1995–ம் வருடம் காலமானார். எனது தாயார் கிரயம் பெற்றதிலிருந்து ஏன் திருத்த ஆவணம் செய்ய முயற்சி எடுக்கவில்லை என்றால் அப்பொழுது தெரியாததால் நான் முயற்சி எடுக்கவில்லை. பட்டாவில் திருத்தம் செய்ய வருவாய் ஆட்சியரிடம் ஏதேனும் மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எனது அனுபவத்தில் உள்ள இடத்தின் புலஎண்ணும், பட்டாவில் உள்ள புல எண்ணும் வேறுபாடாக உள்ளது என்றால் சரிதான். நான் முதலில் பட்டாவில் பட்டா பதிவு சட்டம் பிரிவு 15–ன் கீழ் பட்டாவை சரிசெய்து அதனை அடிப்படையாக கொண்டு பிறழ் திருத்த ஆவணம் பதிவு செய்த பின்புதான் விளம்புகை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றாலும், அவ்வாறு செய்யாமல் வழக்கை நேரடியாக தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.